# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி
## பொதுத்தேர்வு
## 2024
## வளர்தமிழ் 4

சுட்டெண்: 

நேரம்: 120 மணித்துளிகள்
மொத்தப்புள்ளிகள் : 100

## 1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. தமிழ் நெடுங்கணக்கில் உள்ள மொத்த எழுத்துகள் ________________.

   ( 30, 216, 247 )

2. செஞ்சிலுவைச்சங்கம் ________________ நாட்டில் தொடக்கப்பட்டது.

   ( சுவிற்சலாந்து, இத்தாலி, சுவீடன் )

3. தமிழ்த்தாய் என்ற சொல்லைப் பிரித்து எழுதினால் ________________

   ( தமிழ்த் + தாய், தமிழ் + த்தாய், தமிழ் + தாய் )

4. மலர்களில் இருந்து தேனைக் குடிப்பது ________________.

   ( தேன்சிட்டு, நுளம்பு, இலையான் )

5. 'நீதிநெறி விளக்கம்' என்ற நூலை எழுதியவர் ________________.

   ( ஔவையார், சி.வை.தாமோதரம்பிள்ளை, திருவள்ளுவர் )

6. பின்வருவனவற்றில் வேறுபட்ட சொல் ________________.

   ( நவாலி, அஞ்சலகம், வன்னி )

7. பாவலன் தன் குடும்பத்துக்காக ________________ வேலை செய்தான்.

   ( அல்லும்பகலும், ஏறஇறங்க, மேடும்பள்ளமுமாக )

8. **குறள்:**

   ஆங்கஅமைவு எய்தியக் ________________ பயம்இன்றே
   வேந்துஅமைவு இல்லாத நாடு

   ( மண்ணும், கண்ணும், விண்ணும் )

9. '70' என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ____________

( எலுபது, எளுபது, எழுபது )

10. ____________ இலங்கையின் கிழக்குத் திக்கில் அமைந்துள்ளது.

( திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார் )

11. பகல் என்பதன் எதிர்ச்சொல் ____________ .

( பகை, இரவு, பொய் )

12. பின்வருவனவற்றுள் ஒட்டு உயிரி ____________ .

( சுறா, கடல்நாய், மட்டி )

13. பலசரக்குகளை வாங்குவதற்காக ____________ ஆசிய நாடுகளுக்கு வந்தனர்.

( ஐரோப்பியர், ஆரியர், சீனர் )

14. "மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்..." என்ற பாடல் இடம்பெற்ற நூல் ____________ .

( ஆத்திசூடி, மூதுரை, கொன்றைவேந்தன் )

15. வயலில் வேலை செய்த உழவன் தாகத்தினால் நீரை ____________ எனக் குடித்தான்.

( படபட, சலசல, மடமட )

16. நான் நடனம் ஆடிக் கொண்டிருந்தேன். ____________ அம்மா உணவு சமைத்துக் கொண்டிருந்தார்.

( இப்போது, எப்போது, அப்போது )

17. தமிழகம் முழுவதையும் ஆண்ட மன்னன் ______________ .

( இராவணன், பாரி, சங்கிலியன் )

18. கோடைநாளில் குடையைப் போல நிழலைத் தருவது ______________ .

( பனைமரம், ஆலமரம், வாழைமரம் )

19. நீ ______________ நூலை மட்டும் எடு! அவன் தனது நூலை எடுப்பான்.

( எனது, உனது, தனது )

20. **ஒலிவட்டு:**

அன்னைபூபதி பிறந்த ஊர் ______________ .

( மட்டுநகர், கிளிநொச்சி, நல்லூர் )

21. இசை நிகழ்ச்சிகளிலும் பரதநாட்டிய நிகழ்ச்சிகளிலும் சிறப்பிடம் பெறும் இசைக் கருவி ______________ .

( உடுக்கு, தண்ணுமை, ஏழில் )

22. தமிழில் முதன்மையான இலக்கண நூல் ______________ .

( சிலப்பதிகாரம், புறநானூறு, தொல்காப்பியம் )

23. சிறுவனுக்குச் சிறுமி போல தோழனுக்குத் ______________ .

( மாணவி, நண்பி, தோழி )

24. **நொடி:**

பூக்கும் காய்க்கும் கலகலக்கும்; காகம் இருக்கக் கொப்பில்லை.

அது ________________ .

( மா, பலா, நெல் )

25. **பழமொழி:**

முயற்சி உடையார் ________________ அடையார்.

( புகழ்ச்சி, உயர்ச்சி, இகழ்ச்சி )

26. சுற்றம் என்பதன் பொருள் ________________ .

( உறவு, இலக்கு, கூர்மை )

27. கப்பல்கள் தரித்து நிற்கும் இடம் ________________ .

( காப்பகம், துறைமுகம், தொழிலகம் )

28. தரையில் வாழும் உயிரினங்களுக்குத் தேவையான நீர் ________________.

( நன்னீர், கடல்நீர், உவர்நீர் )

29. எல்லாளன் இலங்கையை ________________ ஆண்டுகள் ஆண்டான்.

( 44, 24, 34 )

30. புலவர் ________________ ப் புகழ்ந்து பாடிப் பரிசு பெற்றார்.

( மன்னனுக்கு, மன்னனை, மன்னனால் )

புள்ளிகள் 30

## 2) அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களைக் கீறிட்ட இடங்களில் பொருத்தமாக மாற்றி எழுதுக.

1. நாம் ______________________ மதிக்க வேண்டும்.
   ( பெற்றோர் )

2. அப்பா எனது ______________________ மிதியுந்து வாங்கித் தந்தார்.
   ( பிறந்தநாள் )

3. இனியன் __________________ கடற்கரைக்குச் சென்று விளையாடினான்.
   ( நண்பன் )

4. சி.வை.தாமோதரம்பிள்ளை ______________________ வாழ்ந்தார் .
   ( சிறுப்பிட்டி )

5. நாம் எமது ______________________ மறக்கக் கூடாது.
   ( தாயகம் )

புள்ளிகள் 05

## 3) பின்வரும் சொற்களை உமது வாழிடமொழியில் எழுதுக.

1. மழை ______________________
2. குடை ______________________
3. பனிகாலம் ______________________
4. அங்காடி ______________________
5. செய்தித்தாள் ______________________

புள்ளிகள் 05

**4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்து, கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| அது | நாங்கள் | அவர்கள் |
| நான் | நீங்கள் | |

1. ________________ பூங்காவுக்குச் செல்லும் வழியில் நண்பியைக் கண்டேன்.

2. சிலப்பதிகாரம் இளங்கோவடிகளால் எழுதப்பட்டது. ________________ தமிழருடைய பண்பாட்டையும் வரலாற்றையும் கூறுகின்றது.

3. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தனர். ________________ நாட்டைப் பிடிக்க ஆசைப்பட்டனர்.

4. ________________ நல்லவர்களாக வாழ்ந்தால் எல்லோரும் எம்மைப் பாராட்டுவர்.

5. வீதியில் உந்துகள் செல்கின்றன. ________________ வீதியில் நின்று விளையாடாதீர்கள்!

புள்ளிகள் 05

## 5) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. ____________________ செய விரும்பு.

( அறம், அரம் )

2. மீனவன் ____________________ வீசி மீன் பிடித்தான்.

( வளை, வலை )

3. மாணவர்கள் ஆசிரியரிடம் ____________________ நடக்க வேண்டும்.

( பனிவாக, பணிவாக )

4. அம்மா ஆடிப்பிறப்பன்று ____________________ அவிப்பார்.

( கொழுக்கட்டை, கொலுக்கட்டை )

5. தமிழீழத்தின் தேசிய விலங்கு ____________________ .

( சிறுத்தை, சிருத்தை )

| புள்ளிகள் 05 |
|---|

**6) பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதி, சொல்லியங்களை நிறைவு செய்க.**

1. நாளை எனது நண்பன் இசைவிழாவில் பாட்டுப் ____________________.

2. மக்கள் நல்ல அரசைத் தெரிவுசெய்ய ____________________.

3. இராவணன் வீணைக்கொடியோன் எனப் ____________________ .

4. சென்ற ஆண்டு நாங்கள் தாயகத்துக்குச் ____________________ .

5. தென்னையைத் தெங்கு என்றும் ____________________ .

| புள்ளிகள் 10 |
|---|

7) **மிகப் பொருத்தமான சொற்களைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| பறவைகள் | கிணறு | காய்கறி |
| அருகே | பூக்கள் | |

சேந்தன் வீட்டிற்கு ____________ ஒரு சிறிய தோட்டம் இருக்கிறது. அத்தோட்டத்தில் ____________ ச் செடிகளும் பழமரங்களும் இருக்கின்றன. பழமரங்களில் உள்ள பழங்களைப் ____________ கொத்தித் தின்கின்றன. பழமரங்களுக்கு அருகே வண்ணவண்ணப் ____________ பூத்திருக்கின்றன. தோட்டத்தில் ____________ ஒன்றும் காணப்படுகிறது. தோட்டம் பச்சைப்பசேலெனச் செழிப்பாகக் காட்சியளிக்கின்றது.

புள்ளிகள் 05

## 8) பாடநூல் வினாக்களுக்கு விடை தருக.

1. தாள் உண்ட நீரைத் தலையாலே தருவது எது?

______________________________

______________________________

2. திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற கோவில் எது?

______________________________

3. திருமலைக் கடலில் வந்து கலக்கும் ஆற்றின் பெயர் என்ன?

______________________________

______________________________

4. முத்தமிழும் எவை?

______________________________

______________________________

5. கிளித்தட்டில் மறிக்கும் கன்னையின் தலைவரை எப்படி அழைப்பர்?

______________________________

______________________________

புள்ளிகள் 10

## 9) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

கோழிக்குஞ்சுகள் புல்வெளியில் நின்றன. அப்போது நரி ஒன்று அவற்றைப் பார்த்தது. நரி கோழிக்குஞ்சுகளைச் சாப்பிட நினைத்தது. நரி கோழிக்குஞ்சுகளைத் துரத்திக் கொண்டிருந்தது. இதை மரத்தில் இருந்த குரங்கு ஒன்று கண்டது. உடனே குரங்கு பாய்ந்து நரியைத் துரத்திக் கோழிக்குஞ்சுகளைக் காப்பாற்றியது. தாய்க்கோழி குரங்கிற்கு நன்றி கூறியது. நரி, ஓநாய் போன்ற விலங்குகள் பற்றைக்குள் வாழ்கின்றன. நரி, ஓநாய் போன்றவற்றிடம் இருந்து நான் எப்படி எனது குஞ்சுகளைக் காப்பாற்றப் போகிறேன் என்று கோழி குரங்கிடம் கேட்டது. அதற்கு குரங்கு மரக்கிளையில் நான் ஒரு மணியைக் கட்டி விடுகிறேன். நரியோ, ஓநாயோ வந்தால் நான் மணியை அடிப்பேன் நீங்கள் ஓடித் தப்பிவிடலாம் என்று கோழியிடம் குரங்கு கூறியது.

1. கோழிக்குஞ்சுகள் எங்கே நின்றன?

______________________________

2. நரி எவற்றைச் சாப்பிட நினைத்தது?

______________________________

3. தாய்க்கோழி எதற்கு நன்றி கூறியது?

______________________________

4. நரி, ஓநாய் போன்ற விலங்குகள் எங்கே வாழ்கின்றன?

______________________________

5. கோழி குரங்கிடம் என்ன கேட்டது?

______________________________

______________________________

புள்ளிகள் 10

10) தரப்பட்டுள்ள படத்தை வைத்து, 30 சொற்களுக்குக் குறையாமல் கதையைத் தொடர்ந்து எழுதுக.



ஒரு நாள் மாதவி வழியில் ஒரு பூனையைக் கண்டாள். ...........

புள்ளிகள் 15